1970 செப்டம்பர் 9] [திரு. மா. முத்துச்சாமி]

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஏலத்தொகை குறைந்ததற்கான காரணங்கள் இங்கே விளக்கப்படுகின்றன. ஏலங்கள் பகிரங்க ஏலங்கள் ஆகும். எந்த ஒரு நபரும் ஏலத்தில் பங்கு கொள்வதோ அல்லது தாம் விரும்பியவாறு ஏலம் கோருவதோ தடுக்கப்படவில்லை. ஆயினும் 1969-70-ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்று 1970-71-ஆம் ஆண்டில் போட்டி தென்பட வில்லை. 1969-70-ல் இவ்வினங்களில் ஏலம் எடுத்தவர்கள் பெரு நஷ்டத்திற்கு ஆளானூர்கள் என்று வெளிப்படையாகவே பேசப்பட்டது. தியாகி குமரன் மார்க்கெட் கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகைகள் மீதான வழக்குகளும் இருந்தன. இக்காரணங்களால் ஏலத்தில் போட்டி மனப்பான்மை இயற்கை யாகவே குறைந்து தென்பட்டது. ஏலத்தின் போக்கை கவனித்தால் இவ்வினங் களில் மறு ஏலம் நடத்துவதன் மூலம் மேலும் ஆதாயம் கிடைக்க இடமில்லை என ஆணையர் உணர்ந்தார். எந்த இனங்களில் மறு ஏலத்தின் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்ற நிலை இருந்ததோ அந்த இனங்களுக்கு மறு ஏலம் நடத்தியுள்ளார்.

1970 பிப்ரவரி 24, 25 ஆம் தேதிகளில் இந்த ஏலங்கள் நடத்தப்பட்டன. ஒரு சிலர் மேற்கூறியவற்றில் 1, 2, 5 ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் நடத்த வேண்டுமென 16—3—1970 அன்று ஆணையரிடம் வந்து கோரினர். அதற்குள் ஏலங்கள் முடிந்து ஏலத்தொகைகளும் உறுதி செய்யப்பட்டன. ஏல நோட் டீசில் மறு ஏலம் கோருவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள கெடு நாட்கள் இரண்டு. ஆனல், விண்ணப்பதாரர்கள் இக்கெடுவைக் கடந்து விண்ணப்பித் திருந்தார்கள். எனவே, ஆணையர் இவ்விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்ய வேண்டியதாயிற்று.

கழிவு நீர் பண்ணையிலுள்ள 27 பகுதிகளுக்கு 1970 பிப்ரவரி 25 ஆம் நாள் அன்று ஏலம் நடத்தப்பட்டது. அன்று 20 பகுதிகளுக்கு மட்டுமே ஏலம் கோருபவர்கள் இருந்தார்கள். மீதியிருந்த ஏழு பகுதிகளுக்கும் 1970 மார்ச் 9-ம் நாளன்று புதிய ஏலம் நடத்தப்பட்டது. இந்நிலையில் இவ்வினத்திற் கான ஏலத்தில் குறையேதும் கூறுவதற்கில்லை. சென்ற ஆண்டு பெய்த பெரு மழை காரணமாகச் சுற்று வட்டாரத்தில் நிறையப் புல் கிடைத்ததால் நகராட்சிக் கழிவு நீர்ப் பண்ணையில் விளைந்த புல்லுக்கு அதிக கிராக்கி ஏற்படவில்லை.

மேலும் இவ்விடத்திலிருந்த புறக்கட்டைகள் 10 ஆண்டுகளுக்கு முன்பாகப் பயிர் இடப்பட்டனவாகும். எனவே அதிலிருந்து கிடைக்கக் கூடிய தொகை படிப்படியாகக் குறைந்து வந்தது. இவ்வினத்தில் ஏலத்தொகை குறைந்த தற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

நகராட்சி ஆணையர் இந்த ஏலங்களில் சட்டத்திற்குட்பட்டே நடந்துள்ளார். அவருடைய வரம்புக்கு மேற்பட்ட செயல்களில் அவரைக்குறை கூறுவதில் பயனில்லை. அவர் தம் கடமையைச் செவ்வனே செய்துள்ளார். வருமானத்தில் குறைவு ஏற்பட்டுள்ளதென்றல் அது இன்றைய மார்க்கெட் நிலவரத்தைப் பொறுத்ததேயன்றி, அவருடைய கவனக் குறைவால் அல்ல. ஏலங்கள் பகிரங்கமான ஏலங்கள் என்றும், யாரும் ஏலத்தில் கலந்து கொள்

வதோ அல்லது விரும்பியவாறு ஏலம் கோருவதோ தடுக்கப்படவில்லை என்பதும் மீண்டும் தெளிவாக்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் இவ்வேலைத்தில் தவறேதும் நடைபெற்றிருப்பதாகத் தென்படவில்லை.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் விதி 82-ன் கீழ் அளித்துள்ள இந்த அறிக்கையின்மீது கேள்விகளுக்கு இடமில்லை.

7. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் —தொடர்ச்சி.

THIRU K. VINAYKAM : May I know Sir, who are going to be the speakers now?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பூவராகன், திரு. ம. பொ. சி. இரண்டு தலைவர்களும் பேசுவார்கள்.

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir. This No-Confidence Motion was moved by four people of my party and the Censure Motion was moved by a Member of the Communist Party. So five Members of this House have moved, four, one motion and another one motion. All of them have been given an opportunity to express their views. I am not questioning your ruling. It was pertinent and right. I did not move the motion. I was under the impression that I will be given an opportunity to speak. Even this morning the Chief Minister gave me a tacit indication that I may be permitted to speak. But I now understand, that the Hon. Speaker, in consultation with others, had withdrawn my name and that I may not be allowed to speak.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவரை கலந்து கொண்டு செய்யவில்லை.

திரு. கே. விநயகம்: பத்துநிமிஷம் போதும். பத்துநிமிஷத்தில் ஹெவன்ஸ் விழுந்துவிடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவல்ல பொருள். உங்களுக்கு நேரம் கொடுத்தால் மற்றவர்களும் கேட்பார்கள்.

THIRU K. VINAYAKAM : Are you going to throttle me and gag my mouth by not allowing me to speak? I was one of the sponsors of the motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விநயகம் பல ஆண்டுகளாக சட்டசபையில் பணியாற்றியவர்கள். பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்பதற்காக இப்படி சொல்வது சரியாகாது.

THIRU K. VINAYAKAM : Sir, the expression "throttling" means in this context, not permitting a person to speak . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது மணி 11½ ஆகிறது. இன்னும் இரண்டு மணி நேரத்தில் கூட்டத்தை முடிக்க வேண்டும். ஒன்றி